இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 30.08.2026

# சூழலியல் அல்ல சூழ்ச்சியியல்!

பரந்தூர் விமான நிலைய ரத்து விவகாரத்தில் சூழலியல்வாதி பட்டத்தை தனக்குத் தானே சூட்டிக் கொள்கிறது த.வெ.க. அரசு. அவர்கள் சூழ்ச்சியியலையே செய்ய நினைக்கிறார்கள் என்பதை சட்டசபையில் வெளிப்படையாக ஒப்புக் கொண்டு விட்டார் தொழில் துறை அமைச்சர் கீர்த்தனா.

“பரந்தூர் விமான நிலையமா? விவசாயிகளின் கண்ணீரா என்றால் எங்கள் தலைவர் விவசாயிகளின் கண்ணீர் பக்கம் தான் நிற்பார்” என்று கனைக்கிறார் பொதுப்பணித்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா. **பரந்தூர் விமான நிலையத்துக்காக விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்ட நிலங்கள் விவசாயிகளிடமே தரப்போகிறோம் என்று சொல்லி விட்டாரா முதலமைச்சர் விஜய்? இல்லை. இல்லவே இல்லை.**

**‘விவசாயிகள் பக்கம் நிற்பதற்காகவே நாங்கள் பரந்தூர் விமான திட்டத்தை ரத்து செய்திருக்கிறோம்’ என்று சொல்லும் த.வெ.க. அரசு, விவசாயிகளுக்காக என்ன செய்தியைச் சொல்லி இருக்கிறது? உங்கள் நிலம் உங்களிடமே வந்து சேரும் என்றா? முதலமைச்சர் அறிவிப்பிலும் விவசாயிகளுக்கு எந்த செய்தியும் இல்லை. அமைச்சர்கள் சொன்னதிலும் விவசாயிகளுக்கான எந்த அறிவிப்பும் இல்லை.**

“விரைவில் புதிய விமான நிலையத்துக்கான இடத்தை முதலமைச்சர் அறிவிப்பார்” என்று சொல்கிறார் அமைச்சர் ஆதவ் அர்ஜுனா. புதிய விமான நிலையம் அமைக்க 5 ஆயிரம் ஏக்கர் இடம் சென்னைக்கு அருகில் இருக்கிறதா? அந்த இடம் விவசாயிகளின் பயன்பாட்டில் இல்லாமல் இருக்கிறதா? விவசாயிகளிடம் இருந்து வாங்காமல் 5 ஆயிரம் ஏக்கர் இடத்தை ஒரே இடத்தில் அடையாளம் காணமுடியுமா? கோடிக்கணக்கான மக்கள் காதில் ‘லாட்டரி’ சுற்றுகிறார் ஆதவ் அர்ஜுனா.

**அமைச்சர்கள் யாருக்கும் இது ஒன்றிய அரசின் திட்டம் என்பதே தெரியவில்லை. இது ஏதோ மாநில அரசின் கட்டுப்பாட்டில் பேருந்து நிலையம் கட்டும் திட்டத்தைப் போல நினைத்துக் கொள்கிறார்கள். விமானநிலையம் என்பது ஒன்றிய அரசின் திட்டம். இடத்தை தேர்வு செய்வதும், ஒப்புதல் வழங்குவதும், விமானநிலையம் அமைப்பதும் ஒன்றிய அரசு தானே தவிர, மாநில அரசு அல்ல. இந்த குறைந்தபட்ச சிற்றறிவு கூட இல்லாமல், த.வெ.க. அமைச்சர்கள் பதில் அளிப்பதைப் பார்த்தால் எரிச்சல் தான் வருகிறது.**

பரந்தூர், பண்ணூர், திருப்போரூர், படாளம் ஆகிய நான்கு இடங்கள் தேர்வு செய்யப்பட்டது. முதல் கட்ட பரிசீலனையில் திருப்போரூரையும், படாளத்தையும் ஒன்றிய அரசு நிராகரித்தது. பின்னர் பண்ணூரைவிட பரந்தூரே பொருத்தமானது என்று ஒன்றிய அரசு தேர்வு செய்தது. பரந்தூர் அமைந்தால் அதுதான் இந்தியாவில் மிகப்பெரிய விமான நிலையமாக இருக்கும். இது எதையும் தெரிந்து கொள்ளாமல் அமைச்சர்கள் விதண்டாவாதம் செய்கிறார்கள்.

‘சுற்றிலும் இடம் வாங்கிவிட்டார்கள்’ என்று சொல்வது எல்லாம் அமைச்சர்கள் சொல்லும் பதிலா? ‘ஒரு தனியார் நிறுவனத்தைச் சொல்லி அவர்களுக்கு அங்கு இடம் அதிகமாக இருக்கிறது. அவர்களுக்காகத் தான் தி.மு.க. பேசுகிறது’ என்கிறார் ஒரு அமைச்சர். அந்த நிறுவனம், ‘எங்களுக்கு ஒரு ஏக்கர் கூட இல்லை, இருக்கிறது என்று நிரூபித்தால் அதை இலவசமாகத் தருகிறோம்’ என்று உச்சந்தலையில் ‘நறுக்கு நறுக்கு’ என்று கொட்டி விட்டது. இதெல்லாம் த.வெ.க. அமைச்சர்களுக்கு உறைக்காது.

‘விவசாயிகளிடம் இருந்து பெற்ற இடத்தை என்ன செய்யப் போகிறீர்கள்?’ என்று முன்னாள் நிதி – தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கேட்ட கேள்விக்கு வாய்மூடி முதலமைச்சர் விஜய் எந்த பதிலையும் சொல்லவில்லை. எல்லாவற்றுக்கும் எழுந்து பதில் சொல்லும் ஆதவ் அர்ஜுனாவும் பதில் சொல்லவில்லை. ‘கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் குறித்து முதல் அமைச்சரிடம் ஆலோசித்து முடிவு பின்னர் அறிவிக்கப்படும்’ என்று மின்சாரத் துறை அமைச்சர் நிர்மல் குமார் சொல்கிறார்.

அடுத்த நிமிடமே தொழில் துறை அமைச்சர் கீர்த்தனா எழுந்து, “கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் மாற்றித் தொழில் திட்டங்கள் மக்களைப் பாதிக்காதவாறு செயல்படுத்தப்படும். இதன் மூலம் தொழில் வளர்ச்சி, வேலைவாய்ப்பு, பொருளாதார வளர்ச்சி ஏற்படும். இரண்டாவது விமான நிலையம் வேண்டும். மக்கள் பாதிக்கப்படாமல் அது அமைக்கப்படும். ‘சிப்காட்’டும் மக்கள், விவசாயம் பாதிக்கப்படாத வகையில் தான் இருக்கும்” என்று சொல்லி இருக்கிறார்.

‘இன்னும் முடிவெடுக்கவில்லை’ என்கிறார் அமைச்சர் நிர்மல்குமார். ‘மாறுத் தொழில் திட்டம் செயல்படுத்தப்படும். சிப்காட் கூட வரலாம்’ என்கிறார் அமைச்சர் கீர்த்தனா. பரந்தூர் நிலத்தை வைத்து சூழ்ச்சியியல் நடத்துகிறார்கள் என்பது இதன் மூலமாகத் தெரிகிறது.

‘கையகப்படுத்தப்படுத்தப்பட்ட நிலத்தை வேறு எதற்கும் பயன்படுத்த முடியாது’ என்று முன்னாள் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு சொன்ன போது, த.வெ.க. அரசின் முழுத்தந்திரமும் வெட்ட வெளிச்சம் ஆனது.

**“ஒரு குறிப்பிட்ட திட்டத்துக்கு கையகப்படுத்தப்பட்ட நிலம் சில காரணங்களால் செயல்படுத்த முடியாத நிலையில் மற்ற பொதுத் திட்டங்களுக்கு அரசு ஒதுக்கீடு செய்து உத்தரவு வழங்கிட சட்டங்களில் வழிவகை உள்ளது” என்று சொல்கிறார் தொழில் துறை அமைச்சர் கீர்த்தனா. அப்படியானால் இவர்கள் தந்திரத்தோடு தான் முடிவு எடுத்துள்ளார்கள். விவசாயிகளுக்காக இல்லை. வேறு அரசியல் உள்நோக்கத்தோடு தான் த.வெ.க. அரசு இந்த திட்டத்தை ரத்து செய்துள்ளது.**

**விமானநிலையம் அமைக்க பெறப்பட்ட இடத்தில் விமானநிலையம் அமைக்கப்படப் போவதும் இல்லை. திட்டம் ரத்து செய்யப்பட்டதால் விவசாயிகளுக்கும் அந்த இடம் திருப்பி அளிக்கப் போவதும் இல்லை. மாற்றுத் திட்டம் என்ற பெயரால் நிலத்தை அப்படியே போடப் போகிறார்கள். எந்த தொலைநோக்குப் பார்வையுமற்ற அரசு பிற்காலத்தில் இந்த நிலத்தை ரியல் எஸ்டேட் தொழிலுக்கு கூட தாரை வார்க்கும் என்பதையும் மறுக்க முடியாது.**



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (28–08–2026) சென்னை தேனாம்பேட்டையில் நடைபெற்ற, திருநெல்வேலி மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன் (எ) கிட்டு இல்லத் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மணமக்கள் எம்.ரேணுகா தேவி – பி.காளிராஜன் (எ) பாலாஜி ஆகியோரை வாழ்த்தினார். கழக முன்னணியினர் உடன் உள்ளார்கள்.



சென்னை, தேனாம்பேட்டையில் நடைபெற்ற, நெல்லை மாநகர மேயர் இராமகிருஷ்ணன் (எ) கிட்டு இல்லத் திருமண வரவேற்பு விழாவில், கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு, மணமக்கள் எம்.ரேணுகாதேவி – பி.காளிராஜன் (எ) பாலாஜி ஆகியோரை வாழ்த்தினார்.

### சர்வதேச அளவிலான கார் ரேஸை எங்கள் ஆட்சியில் சிறப்பாக நடத்திக் காட்டினோம்!

### எங்களை கொச்சைப்படுத்துவதாக நினைத்து நீங்கள்

# கார் ரேஸ் விளையாட்டு வீரர்களை கொச்சைப்படுத்துகிறீர்கள்!

## சட்டப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் விமர்சனம்!

**சென்னை, ஆக. 30- சட்டப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசும்போது, சர்வதேச அளவிலான கார் ரேஸை எங்கள் ஆட்சியில் சிறப்பாக நடத்திக் காட்டினோம். எங்களை கொச்சைப்படுத்துவதாக நினைத்து, நீங்கள் கார் ரேஸ் விளையாட்டு வீரர்களை கொச்சைப்படுத்துகிறீர்கள் என்று விமர்ச்சித்தார்.**



சட்டப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதா வது:-

பேரவைத் தலைவர் அவர்களே,

எங்கள் உறுப்பினர் பேசும் போது இங்கு முதலமைச்சர் அவர்கள் 110 அறிவிப்பில் கொடுத்திருக்கிறார். யார் யாருக்கு கார் இல்லையோ அவர்களுக்கு நீங்கள் வாங்கி கொடுங்கள். விவசாயக் கடன்கள் எல்லாம் இன்னும் தள்ளுபடி செய்ய வில்லை. அவையெல்லாம் நீங்கள் தேர்தலில் கொடுத்த வாக்குறுதி.

ஆட்சி பொறுப்பேற்கும் போது என்ன சொன்னீர்கள் என்றால், சென்ற அரசு கஜானாவைத் துடைத்து வைத்துவிட்டு சென்று விட்டார்கள் என்று குறை சொல்லிக் கொண்டு இருந்தீர்கள்.

எனவே, எங்களின் திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்த நிலைப்பாடு. திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் கள் எங்களுக்கு தேவை யில்லை என்று தெளிவாகச் சொல்லி விட்டோம். நீங்கள் யாரும் கார் வாங்கிக் கொள்ள கூடாது என்று சொல்லவில்லை. கார் வாங்கிக் கொள்ளுங்கள். எல்லா தொகுதி யும் சுற்றுங்கள்.

எங்கள் சட்டமன்ற உறுப்பினர் தொடர்ந்து மூன்றாவது முறையாக அந்தத் தொகுதியில் நின்று, மக்களின் வாக்குகளைப் பெற்று வென்று வந்துள்ளார். எனவே, அவரைக் கொச்சைப் படுத்தி பேசக்கூடாது.

இங்கு `கார் ரேஸ்’ பற்றி ஒரு பேச்சு வருகிறது. அது ஒரு இன்டர் நேஷனல் ரேஸ். ஆசியாவிலேயே முதன்முறை யாக இரவு நேரத்தில் நடத்திக் காட்டுவோம் என்று நடத்திக் காட்டினோம். இதைத் தடுப்பதற்கு அப்போது பலபேர் நீதிமன்றத்துக்கு எல்லாம் சென்றார்கள். பாதுகாப்பு இல்லை, கார்கள் எல்லாம் வேகமாகச் செல்லும் என்று சொல்லி, அதை நிறுத்துவதற்கு முயற்சி செய்தார்கள். ஆனால், அவர்களையெல்லாம் நீதிமன்றம் கடுமையாக கண்டித்தது. சர்வதேச அளவிலான ஒரு நிகழ்ச்சியை (இன்டர்நேஷனல் ஈவென்ட்) தடுத்து நிறுத்த முயற்சி செய்கிறீர்கள். இதை நீங்கள் நடத்த வேண்டும் என்று வெற்றிகரமாக எங்கள் ஆட்சியில் அதை நடத்தினோம்.

கார் ரேஸை கொச்சப்படுத்துவது, நீங்கள் எங்களைக் கொச்சைப் படுத்தவில்லை. அந்த விளையாட்டு வீரர் களைக் கொச்சைப்படுத்தி இருக்கிறீர்கள்.

இவ்வாறு சட்டப் பேரவையில், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

### நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளில் வசிக்கும் மக்கள்

# புதிய வீடுகள் கட்டுவதற்கு இசைவு தெரிவிப்பதில்லை!

## சட்டப்பேரவையில் — எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கே.என்.நேரு விளக்கம்!

**சென்னை, ஆக. 30- நகர்ப்புறவாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் வசிக்கும் மக்கள் புதிய வீடுகள் கட்டுவதற்கு இசைவு தெரிவிப்பதில்லை என்று சட்ட மன்றத்தில் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கே.என். நேரு பேசினார்.**

தமிழ்நாடு சட்டமன்றத்தில் நேற்று நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளின் நிலை குறித்து நடைபெற்ற விவாதத்தின் போது கே.என். நேரு பேசியதாவது:-

நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் அடுக்கு மாடி குடியிருப்புகள் கட்டும் போது ஒவ்வொரு குடியிருப்புக்கும் சராசரியாக 25 ஆண்டுகள் வயது நிர்ணயம் செய்யப்படுகிறது.

அதன் பின்பு அந்த கட்டிடங்களை இடித்துவிட்டு புதிதாக கட்டி தருகிறோம் என்று சொன்னால், அப்பகுதியில் குடியிருப்பவர்கள் இடம்மாற விரும்புதில்லை



இதுதான் உண்மையான நிலை, மக்களின் எதிர்ப்பு இல்லை என்றால் உடனடியாக அப்பகுதியில் புதிய குடியிருப்புகள் கட்டப்பட்டு அங்கு குடியிருந்தவர்களுக்கே வீடுகள் ஒதுக்கப்படுகிறது. உதாரணத்திற்கு கோட்டூர்புரத்தில் உள்ள குடியிருப்புகள் கலைஞர் காலத்தில் கட்டி கொடுத்தார், அதன் பிறகு கட்டிடங்கள் சிதிலம் அடைந்ததால், திமுக ஆட்சியின் போது முதல்வராக இருந்த தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் புதிய குடியிருப்புகளை கட்டி வழங்கினார்,

ஆனால் பல்வேறு குடியிருப்புகளில் புதிதாக கட்டிடம் கட்டித் தருவதற்கு அங்குள்ள உரிமையாளர்கள் இடம் மாறுவதற்கு இசைவு தெரிவிப்பதில்லை, இதுதான் உண்மை நிலையே தவிர , புதிதாக வீடுகள் கட்டி தரக் கூடாது என்ற எண்ணமெல்லாம் இல்லை, வேண்டுமென்றால் அனைத்து கட்சி உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்றை அமைத்து அடுக்குமாடி குடியிருப்பு பகுதிகளை ஆய்வு மேற்கொள்ளலாம், நாங்கள் அதற்கு தயாராக உள்ளோம்.

இவ்வாறு அவர் பேசினார்.